# தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரானவரா அமைச்சர் !?

மாண்புமிகு அமைச்சர் ராஜ கண்ணப்பன் அவர்களுக்கு அவரது கட்சியை சேர்ந்த சில போட்டியாளர்களும், சில பொறுப்பாளர்களும், பொறாமைகள் கொண்டோரும்,அமைச்சர் ராஜ கண்ணப்பன் அவர்களுக்கு எதிரியாகவும், அரசுக்கு எதிராகவும் நின்று அவரது இலாக்கா மாற்றத்திற்கான பணிகளை செவ்வனே செய்து முடித்து விட்டனர்.

அமைச்சர் ராஜகண்ணப்பன், 90 லட்சத்திற்கு மேல் வாக்காளர்களை கொண்ட ஒரு சமுதாயத்தின் தனிப் பெரும் ஒரே தலைவராக உள்ள சிங்கத்தை சாய்த்து விட்டதாக பலரும் தப்பு கணக்கு போட்டு கொண்டிருப்பது தான் இதில் வேடிக்கையாக உள்ளது.

அதே நேரத்தில் சில ஊடகக்காரர்களாலும், மற்றும் சதிகாரர்களின் சதி திட்டத்திற்கு தலையசைத்த சிலர் இதனை "சாதீ" பிரச்சனையாக்கி அமைச்சருக்கு எதிராக ஒரு அரசியலை உருவாக்கி வருகின்றனர்.

இதில் பிரசனைக்குரிய "ஆன்டி" ஹீரோவான BDO - அவர்களது பேட்டியில் அவர் வேண்டுமென்றே விஷயத்தை பெரிதாக்கிவிடுவதும், மற்றும் அவரது உயர் அதிகாரியான அமுதா அவர்களின் ஆதரவை தன் பக்கம் நிறுத்திக் கொள்வதற்காக, அமுதாவை கூட மேடம் என்று சொல்லாமல்,அமைச்சர் அமுதா, அமுதா, அமுதா என்று அவரது பெயரை சொல்லி மரியாதை இல்லாமல் பேசினார் என அந்த உயரதிகாரியின் ஆதரவையும் பெற BDO முயற்சித்திருப்பதில் இருந்தே, இந்த BDO யாருடைய கட்டுப்பாட்டிலோ தான் செயல்பட்டுக் கொண்டுள்ளார், என்பது நன்கு தெரிய வருகிறது.

தற்போது இதனை தேவேந்திரகுல சமூகத்தினரும், சதிகாரர்களின் சூழ்ச்சிகளால் விழ்த்தப்பட்டு, ஆங்காங்கே மாண்புமிகு அமைச்சர் ராஜ கண்ணப்பன் அவர்களுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருவதும், இதற்கு அரசும் ,காவல்துறையும் அனுமதித்து வருவதும் மிகப் பெரும் அதிர்ச்சிக்குரிய விஷயமாகத்தான் உள்ளது.

அதே நேரத்தில்,பரமக்குடி தேவேந்திரகுல சமூகத்தின் சட்ட பாதுகாப்பு மைய பொறுப்பாளர்கள் இதற்கான உண்மைகள் அறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க தேவேந்திரகுலசங்கம் உறுதிபூண்டுள்ளதால், தேவேந்திரகுல சமுதாயமும் மற்றும் யாதவ சமூகத்தினரும் எந்த போராட்டத்திலும் ஈடுபட்டு சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற வகையிலும் சதிகாரர்களின் சதி திட்டத்திற்கும் யாரும் துணை போய் விட வேண்டாமென்றும் தேவேந்திரகுல அமைப்பே ஒரு அறிவிப்பை வெளியிட்டிருப்பதும் குறிப்பிட கூடிய நல்லதொரு விஷயமாக இருந்தாலும், அமைச்சருக்கு எதிராக ஆங்காங்கே கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருவது பெரும் வருத்தத்திற்குரியதாக உள்ளது.

ஏனெனில் அமைச்சர் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து சமுதாயத்தினரிடத்திலும் யாரிடமும் எந்த வித பாகுபாடும் காட்டாமல் தன் கட்சியின் கொள்கைகளை மீறாத தனிப் பெரும் தலைவர் என்பதை நம் போல் பல மூத்த பத்திரிகை நண்பர்கள் பலரும் அறிவர்.

அதே போல் மாண்புமிகு அமைச்சர் ராஜகண்ணப்பன் தாழ்த்தபட்டோர் சமுதாயத்திற்கு எதிரானவராக இருந்திருந்தால், அவர் பதவி வகித்த போக்குவரத்து துறையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த நடராஜன் IAS அவர்களை ஆணையராக வைத்து அதுவும், அமைச்சருக்கு அடுத்த இடத்தில், உட்கார வைத்து எப்படி அழகு பார்த்திருப்பார்? இது புரிய வேண்டியவர்களுக்கு புரிய வேண்டும்.

அமைச்சர் மீது தொடுக்கப்படும் கண்டன ஆர்ப்பாட்டங்களுக்கும் உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



இந்த புகைப்படத்தில் போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு சிவசங்கர் அவர்களது வலது புறத்தில் ரகு- வும், இடது புறத்தில் தேனி RTO PA. முரளிதரன் மற்றும் அவர்களை சுற்றி கோபாலகிருஷ்ணன், வைதேகி, சிவமுருகன், சின்னசாமி ஆகியோர் உள்ளனர்

இவர்கள் அரசுக்கு எதிராக அவர்களது வலைதளத்தில் இருந்தும் வாட்ஸ் ஆஃப் செயலிகள் மூலம் அரசுக்கும் அமைச்சர் ராஜகண்ணப்பன் அவர்களுக்கும் அவதூறுகளை பரப்பியபடி இவர்களது ஊழல் தனத்தையும் செய்து இவர்களது சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தி வந்தனர். எனவே இதில் தண்டிக்கப்பட வேண்டிய இந்த பணியாளர்களான இவர்கள், புதிய அமைச்சரை சந்தித்து புகைப்படம் எடுத்து வைரலாக்கி வருகின்றனர். இனி இந்த புதிய அமைச்சருக்கு நாங்க தான் எல்லாமே என கூறி அமைச்சருக்கும், அவரது அதிரடியான பி.ஏ.க்களுக்கும் தெரியாமல் மேற்படி யாளர்கள் வசூல் வேட்டையில் இறங்கி விடுவதோடு , அமைச்சர் தரப்புக்கும் பெரும் களங்கத்தையும் இப்போதே தொடங்கி விடுவார்கள்.எனவே அமைச்சர் தரப்பும், அரசு அதிகாரிகளும், இந்த போக்குவரத்து சங்க "போலி" பொறுப்பாளர்களோடு உஷாராக இருந்து கொண்டால் சரி.

மேலும் இதில் போலி பொறுப்பாளரான முரளிதரன் செய்த ஊழல்கள் மற்றும் வரி வசூல் ரசீதின் புஸ்தகத்தில் கோடி கோடியாய் சம்பாதித்த பட்டியல்களும் விரைவில் களத்திற்கு வருவதோடும், மற்றும் மாற்றான் மனைவியோடு இரண்டாம் மனைவியாக குடும்பம் நடத்தி வரும் இந்த போலி மாநில பொதுசெயலாளர் மீதும், அவரது இரண்டாம் செட்டப்பான மாற்றான் மனைவி மீதும் DVAC - யின் லஞ்ச ஒழிப்பு போலிசாரின் மூலமாக பெரும் வழக்கு ஒன்று பதிவாகி உள்ளது. அனால் இவர்கள் இருவர் மீதும் இதுவரை போக்குவரத்து துறையினரால் ஒரு சிறிய நடவடிக்கை கூட எடுக்கவில்லை என்றால் இந்த எழிலகத்தின் பணிகள் எந்தளவுக்கு மோசமாக உள்ளது என்பதை அறிந்து அமைச்சர் தரப்பில் விழித்துக் கொண்டால் சரி.







மேலும்,மேற்படியாளர்களின் அனைத்து ஊழல்களும் ஆதாரங்களோடு உயர் அரசு செயலர்களுக்கும், விஜிலென்ஸ் மற்றும் துறை இயக்குனர்களுக்கும் ஆதாரங்களோடு புகாராக வைத்து அவர்களது கவனத்திற்கு கொண்டு செல்வோம் (இணைப்பு முரளி மற்றும் அவரது இரண்டாம் செட்டப்பான west RTO- சென்னை -யில் பணிபுரியும் ராஜேஸ்வரியின் FIR)

அதே நேரத்தில் சங்கரன்கோவில் அலுவலகத்தில் RTO-வின் நேர்முக உதவியாளராக செயல்படும் ரகு (NT சங்கத்தில் போலி பொறுப்பாளர்கள நியமித்து வசூல் செய்து வரும் "CORRUPTION" தலைவர்) அதாவது, DTC நடராஜனை சிக்க வைத்ததும் அரசுக்கும் அமைச்சருக்கும் எதிராக செயல்பட்டு நடத்தி முடித்த ரகு-வின் துரோகத்தாலும், அவர்களது பொறுப்பாளர்களின் குழ்ச்சிகளாலும், எழிலகத்தில் நடந்த விஜிலென்ஸ் போலிசார் நடவடிக்கைக்கு பின், ஆணையர் நடராஜன் IAS அவர்களிடம் விளக்கம் கோரும் சாக்கில் ,விசாரணை என்ற பெயரில் ஆணையர் நடராஜன் IAS அவர்களை பணியிட மாற்றம் செய்து "பலி" வாங்கி கொண்டிருக்கலாம். ஆனால் அப்படி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை,அமைச்சர் ராஜகண்ணப்பன்.

அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் என நினைத்து அந்த IAS - அதிகாரியான ஆணையர் அவர்களது, மனது புண்படும்படியாக அமைச்சர் மாண்புமிகு ராஜகண்ணப்பன் அவர்கள் ஒரு நாளும், ஒரு பொழுதும் கூட மனம் நோகதபடி தான் நடத்தி வந்தார் என்பதை துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளும் மற்றும் IAS நல சங்க அதிகாரிகளது சங்கத்தில் உள்ளவர்களும் அறிவார்கள் .

இதனை எல்லாம் அறியாத மற்றும் அமைச்சரின் நல்லதொரு மனங்களை புரியாத சிலரால்.... மட்டுமே

**இது "சாதீ" ரீதியான, அரசியலாக்கப் பட்டு வருகிறது.**

**இதனை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி .**

**நெல்லை கோபால்.**
**மூத்த பத்திரிகையாளர்.**
**9994478389**
**03-04-2022.**